**CC.No. 274/2026 (JM.No.II, DHARMAPURI)**

**15.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 1 : திரு.சுப்பிரமணி த/பெ. மலையன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் செக்காரப்பட்டியில் குடியிருந்து, ஏரிக்கொடி அருகே திருசெந்தூர் நகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து எனக்கு தெரியும். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. 23.10.2025 அன்று இரவு சுமார் 11.53க்கு என்னுடைய செல்போனிற்கும், என்னுடைய மனைவி வெண்ணிலா செல்போன்றிக்கும், மாமானார் கோவிந்தன் செல்போனிற்கும் அலாறம் சத்தம் வந்தது. என்னுடைய வீட்டிற்கும் கடைக்கும் 100 மீ தொலைவு இருப்பதால் என்னுடைய நகை கடைக்கு சென்று பார்த்தபோது என்னுடைய கடையின் அலாறம் கேபிலும், சி.சி,.டிவி கேபிலும் அறுக்கப்பட்டு இருந்தது. உள்ளே உள்ள CCTV footageபார்த்போது 2 நபர்கள் முகம் முழுவதும் துணியை போட்டு மூடி கொண்டு, ஒரு நபர் மீது ஒரு நபர் ஏறி CCTV கேபிளின் ஒயரை அறுத்து கொண்டிருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு யாரும் இல்லை. உடனே 101 நம்பருக்கு போன் செய்தேன். 10 நிமிடத்திற்குள் காவல் துறையினர் வந்தார்கள். என்னுடைய கடையில் எந்த பொருளும் திருடு போகவில்லை. இது சம்மந்தமாக இண்டுர் போலிசாரிடம் புகார் மனு அளித்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து நிறைய காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.15 17:15:55 +0530

**CC.No. 274/2026 (JM.No.II, DHARMAPURI)**

**15.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 2 : திருமதி.வெண்ணிலா த/பெ.சுப்பிரமணி**

**<u>முதல் விசாரணை</u>**

நான் செக்காரப்பட்டியில் குடியிருந்து, ஏரிக்கொடி அருகே திருசெந்தூர் நகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை போன் மூலம் பார்த்து தான் எனக்கு தெரியும். அ.சா.1 என்னுடைய கணவர் ஆவார். 23.10.2025 அன்று இரவு சுமார் 11.53க்கு என்னுடைய செல்போனிற்கும், என்னுடைய கணவர் சுப்பிரமணி செல்போன்றிக்கும், அப்பா கோவிந்தன் செல்போனிற்கும் அலாறம் சத்தம் வந்தது. என்னுடைய வீட்டிற்கும் கடைக்கும் 200 மீ தொலைவு இருப்பதால் என்னுடைய நகை கடைக்கு சென்று நானும், அ.சா.1வும், சாட்சி.3வும் பார்த்தபோது கடையின் அலாறம் கேபிலும், சி.சி,.டிவி கேபிலும் அறுக்கப்பட்டு இருந்தது. உள்ளே உள்ள CCTV footageபார்த்போது 2 நபர்கள் முகம் முழுவதும் துணியை போட்டு மூடி கொண்டு, ஒரு நபர் மீது ஒரு நபர் ஏறி CCTV கேபிளின் ஒயரை அறுத்து கொண்டிருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு யாரும் இல்லை. உடனே 101 நம்பருக்கு போன் செய்தேன். 15 நிமிடத்திற்குள் காவல் துறையினர் வந்தார்கள். என்னுடைய கடையில் எந்த பொருளும் திருடு போகவில்லை. இது சம்மந்தமாக இண்டுர் போலிசாரிடம் அ.சா.1 புகார் மனு அளித்தார். இந்த சம்பவம் குறித்து நிறைய காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u> – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.15 17:16:01 +0530

**CC.No. 274/2026 (JM.No.II, DHARMAPURI)**

**15.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 3 : திரு.கோவிந்தன் த/பெ.தாதப்பன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் அகதப்பாடியில் குடியிருந்து, வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 என்னுடைய மருமகன், அ.சா.2 என்னுடைய மகள் ஆவார். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 11.53 மணிக்கு என்னுடைய செல்போனிற்கும், என்னுடைய மருமகன் சுப்பிரமணி செல்போன்றிக்கும், மகள் வெண்ணிலா செல்போனிற்கும் அலாறம் சத்தம் வந்தது. உடனே கடைக்கு சென்று நானும், அ.சா.1வும், சாட்சி.2வும் பார்த்தபோது கடையின் அலாறம் கேபிலும், சி.சி,.டிவி கேபிலும் அறுக்கப்பட்டு இருந்தது. எங்களுடைய கடையில் இருந்து எந்த பொருளும் திருடு போகவில்லை. இந்த சம்பவம் குறித்து நிறைய காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u> – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.15 17:16:05 +0530